2019

# செயலாற்றுகை அறிக்கை

வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
பொது திறைசேரி
நிதி அமைச்சு
கொழும்பு – 01

# உள்ளடக்க அட்டவணை


**1 நிறுவன அமைப்புமுறை** 1

1.1 அறிமுகம் 1
1.2 தூர நோக்கு 1
1.3 செயற்பணி 1
1.4 இலக்குகள் 1
1.5 நோக்கங்கள் 2
1.6 பிரதான பணிகள் 2
1.7 நிறுவனக் கட்டமைப்பு 5

**2 திணைக்களத்தின் செயலாற்றுகை** 6

2.1 பிரதான அடைவுகள் 6
2.2 வர்த்தகக் கொள்கை 6
2.3 வர்த்தக உடன்படிக்கை 7

2.3.1 வர்த்தக உடன்படிக்கைகளின் செயலாற்றுகை 8

2.3.1.1 செயற்பாட்டு மட்டத்தில் வர்த்தக உடன்படிக்கை 8
2.3.1.1.1 இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 8
2.3.1.1.2 பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 10
2.3.1.1.3 தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 12
2.3.1.1.4 ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை 15
2.3.1.1.5 இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 17

2.3.1.2 பேச்சுவார்த்தை மட்டத்தில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 18
2.3.1.2.1 வங்காள விரிகுடா நாடுகளில் தொழில்நுட்ப பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு முன்னெடுப்பு (BIMSTEC) சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 18
2.3.1.2.2 உத்தேச பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழை உடன்படிக்கை 19
2.3.1.2.3 உத்தேச சீன- இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 19
2.3.1.2.4 உத்தேச இல. தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 20

2.3.2 சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் செயலாற்றுகை 20

2.4 வர்த்தக வசதியளிப்பு 22
2.4.1 உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதி உடன்படிக்கை பின்னணியும் ஈடுபாடும் 22

2.5 இறக்குமதித் தீர்வைக் கட்டமைப்பு 24
2.5.1 2019 இல் இயைபு முறைகுறியீட்டுக்கு புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய உப பிரிவுகள் 25
2.5.2 1962 இன் 19 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான திருத்தங்கள் 27
2.5.3 2007 இன் 48 ஆம் இலக்க விசேட நுகர்வுப் பொருள் அறவீடு 29

2.6 சுங்க களஞ்சியசாலைகள் 35
2.7 அந்நியச் செலாவணி சட்டச் செயற்படுத்துகை மற்றும் கூட்டிணைப்பு 36
2.8 சுங்க வழக்குகள் தொடர்பான மேன்முறையீடு 39
2.9 நீதிமன்ற வழக்குகள் 40

2.10 விசேட திட்டக் கருத்திட்டங்கள் 40

2.10.1 சலுகை அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்க ஊழியர்களுக்கான திட்டம் 40

2.10.2 பொ.நி.சு. இல. 22/99 மற்றும் அதன் திருத்தங்களின் கீழ் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல் 40

2.10.3 இராஜதந்திர அலுவலர்களுக்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருப இல. 210 கீழ் மோட்டார் வாகன இறக்குமதிக்கான சலுகைத் திட்டம் 41

2.10.4 பல்வேறு தீர்வைச் சலுகைத் திட்டங்களின் கீழ் இற்குமதிசெய்யப்பட்ட வாகனங்களின் விற்பனை 41

2.10.5 தீர்வை விலக்களிப்புகள் 41

2.10.6 ஏற்றுமதிச் செயன்முறைத் திட்டத்திற்கான இறக்குமதி 43

2.11 ஏனைய அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக்கான அவதானிப்புகளைத் தயாரித்தல் மற்றும் திணைக்களத்தினால் அமைச்சரவை விஞ்ஞாபனத்தினைத் தயாரித்தல் 44

2.12 சார்க் அபிவிருத்தி நிதியம் 44

**3 2019 டிசம்பர் 31 முடிவடைந்த வருடத்திற்கான நிதி செயலாற்றுகை** 47

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று 47

3.2 நிதி நிலைகைக் கூற்று 48

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று 49

3.4 நிதிக் கூற்று குறிப்புகள் 50

3.5 வருமான சேகரிப்புச் செயலாற்றுகை 58

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டுச் செயலாற்றுகை 58

3.7 இத் திணைக்களத்திற்கு செலவின ஒதுக்கீட்டு மானியம் 208 நி.பி. நியதி 58

3.8 நிதி அல்லாத ஆதன அறிக்கையின் செயலாற்றுகை 59

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 60

**4 செயலாற்றுகைச் சுட்டிகள்** 65

**5 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளல் செயலாற்றுகை** 68

5.1 நிலையான அபிவிருத்தி இலக்குகள் 68

**6 மனித வள விபரம்** 71

6.1 2019 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு முகாமைத்துவம் 71

6.2 மனித வளங்கள் முகாமைத்துவம் 71

6.3 மனித வளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 71

**7 இணக்கப்பாட்டு அறிக்கை** 75

## அட்டவணைகளின் பட்டியல்


| | | |
|---|---|---|
| அட்டவணை 2.1 | 2019 இந்.-இல. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இறக்குமதி | 8 |
| அட்டவணை 2.2 | 2019 இந்.-இல. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஏற்றுமதிகள் | 9 |
| அட்டவணை 2.3 | இலங்கைக்கான தெற்காஸிய வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி - 2018 /2019 | 10 |
| அட்டவணை 2.4 | 2019 பாக். - இல. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இறக்குமதி | 11 |
| அட்டவணை 2.5 | 2019 பாக். - இல. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஏற்றுமதி | 11 |
| அட்டவணை 2.6 | பாக். - இல. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி - 2018 /2019 | 12 |
| அட்டவணை 2.7 | தெற்காசிய சுதந்திர உடன்படிக்கையின் கீழ் இறக்குமதி - 2019 | 13 |
| அட்டவணை 2.8 | தெற்காசிய சுதந்திர உடன்படிக்கையின் கீழ் ஏற்றுமதி - 2019 | 14 |
| அட்டவணை 2.9 | தெற்காசிய சுதந்திர உடன்படிக்கையின் கீழ் ஏற்றுமதி மற்றும் ஏற்றுமதி - 2018 /2019 | 14 |
| அட்டவணை 2.10 | 2019 ஆசிய- பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இறக்குமதி | 15 |
| அட்டவணை 2.11 | 2019 ஆசிய- பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஏற்றுமதி | 16 |
| அட்டவணை 2.12 | ஆசியபசுபிக் உடன்படிக்கையின் கீழ் இலங்கை வர்த்தக நிலைமை 2018/2019 | 17 |
| அட்டவணை 2.13 | இலங்கை வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இற்குமதி மற்றும் ஏற்றுமதி 2019 | 20 |
| அட்டவணை 2.14 | 2019 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு தீர்வை உட்கட்டமைப்பு | 24 |
| அட்டவணை 2.15 | 2012 இலிருந்து 2019 வரை வரிக் கட்டமைப்பில் மாற்றங்கள் | 25 |
| அட்டவணை 2.16 | 2019 இல் எச்எஸ் இற்கு புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய உப பிரிவுகள் | 25 |
| அட்டவணை 2.17 | 1962 இன் 19 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்புச் சட்டம் | 27 |
| அட்டவணை 2.18 | 2007 இன் 48 இலக்க விசேட நுகர்வுப் பொருள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் தீர்வை திருத்தம் | 29 |
| அட்டவணை 2.19 | அமைச்சரவையின் அனுமதிக்காக அன்னிய செலாவணி சட்டதின் இல. 12 -2017 இன் கீழான புதிய ஒழுங்குமுறைகடகாக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள் | 36 |
| அட்டவணை 2.20 | அமைச்சரவையின் அனுமதிக்காக அன்னிய செலாவணி சட்டதின் இல. 12 -2017 இன் கீழான நடைமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கான முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள் | 37 |
| அட்டவணை 2.21 | அந்நிய செலாவணி சட்டத்தின் 12 ஆம் பிரிவு 2017 இன் பிரகாரம் அமைச்சரினால் அனுமதி வழங்கப்பட்டவை | 38 |
| அட்டவணை 2.22 | சுங்க தீர்வைகளின் மேன்முறையீடு | 39 |
| அட்டவணை 2.23 | விசேட கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தீர்வை விலக்களிப்பு 19(அ) | 41 |

| | | |
|---|---|---|
| அட்டவணை 2.24 | பொதுவான தீர்வை விலக்களிப்பு | 42 |
| அட்டவணை 6.1 | 31.12.2019 இல் உள்ளவாறான பதவியணி | 71 |
| அட்டவணை 6.2 | பயிற்சிநெறியில் பங்குபற்றிய அலுவலர்கள் 2019 | 71 |

# 01. நிறுவன அமைப்பு முறை

## 1.1 அறிமுகம்

வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களமானது, பிரதானமாக இலங்கையின் பொருளாதாரத்தினதும் மக்களினதும் நன்மைக்காக வெளிநாட்டு வர்த்தகம், முதலீடுகள் உள்நாட்டுக் கைத்தொழில மற்றும் விவசாயம் தொடர்பான நிலைத்து நிற்கும் கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்துவதனை நோக்காகக் கொண்டுள்ளது. நாட்டின் சர்வதேச பொருளாதார ஒருங்கிணைப்பின் மேம்பாடு மற்றும் வசதியளித்தல் ஆகியவற்றின் பரந்த குறிக்கோள்களுடன், நிதி அமைச்சின் பொதுத் திறைசேரியின் கீழ் 2006 ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் இந்தத் திணைக்களம் தாபிக்கப்பட்டு வியாபாரம், தீர்வை வரி மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் எனப் பெயரிடப்பட்டது. திணைக்களத்தின் தொழிற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக அதற்கு மீண்டும் 2012 ஆம் ஆண்டில் “வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்” என மறுபெயரிடப்பட்டது.

இத்திணைக்களமானது, அதன் முக்கிய பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு பின்வரும் இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது;

i. வர்த்தகப் பிரிவு
ii. நிருவாக மற்றும் நிதிப் பிரிவு

## 1.2 நோக்கு

நாட்டின் முழுமையான அபிவிருத்தியின் பொருட்டு வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகியவற்றில் முனைப்பான செயற்பாட்டுக் கொள்கைகளை உறுதிப்படுத்துதல்.

## 1.3 செயற்பணி

முழுமையான அபிவிருத்தியின் பொருட்டு ஒருங்கிணைந்த சர்வதேச பொருளாதார வர்த்தகக் கொள்கைக்கு வசதியளிப்பதற்கு வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கை உருவாக்கத்திற்கு உவப்பான சூழலொன்றை உருவாக்குதல்.

## 1.4 இலக்குகள்

- கைத்தொழில் நட்பு தீர்வை வரி நிருவாகமொன்றைப் பெற்றுக் கொள்ளுதல்.
- வியாபாரத்தை இலகுபடுத்தும் சுட்டியை 50 இற்குக் கீழான நிலையில் வைத்துக் கொள்வதற்கு முயற்சித்தல்.
- போட்டிக்குரிய சாதகமான வர்த்தக உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்.
- அரசாங்கத்தின் சமூக மற்றும் பொருளாதார இலக்கினை அடையும் பொருட்டு வரிச்சலுகைகளை அமுல்படுத்துதல்.
- பிராந்தியத்தில் இலங்கையை விருப்பத்திற்குரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான இடமாக மேம்படுத்துதல்.

### 1.5 குறிக்கோள்கள்

- முதலீட்டை அதைரியப்படுத்திய கட்டுப்பாடுகளை நீக்குதல்.
- ஏற்றுமதித் தயாரிப்புக்கான தற்காலிக இறக்குமதி திட்டத்தினையும் (TIEP) சுங்கத் தீர்வை செலுத்தாப் பொருட்குதக் கொள்கையையும் வலுவூட்டுதல்.
- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கான கொள்கையொன்றைத் தயாரிப்பதற்காக தொடர்புடைய பங்குதாரர்களுடன் கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்தல்.
- சேவை பெறுநர்களுக்குப் பொருத்தமான தரவுத்தளம் ஒன்றின் ஊடாக தேவையான தகவல்களை வழங்கி தொழில்முயற்சியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
- அரசாங்கத் துறை உத்தியோகத்தர்களுக்கு சலுகைரீதியான வாகன அனுமதிப் பத்திரம் வழங்குவதனை முறைப்படுத்துதல்.
- நாட்டின் வர்த்தகப் பொருளாதாரத்தின் சமச்சீரற்ற தன்மைக்குள் எதிரிடை நன்மைகளை அடிப்படையாகக் கொண்டு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேம்படுத்துதல்.
- உலகளாவிய ரீதியில் சாதகமான வர்த்தகத்திற்கான / கைத்தொழிலுக்கான வாய்ப்பினை வழங்கக்கூடிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேம்படுத்துதல்.

### 1.6 பிரதான தொழிற்பாடுகள்

#### வர்த்தகக் கொள்கை தொழிற்பாடுகள்

வர்த்தகப் பிரிவானது, வர்த்தகம், கைத்தொழில், விவசாயம் மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான தீர்வை வரிக் கொள்கைகளை வகுத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மீளாய்வு செய்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருக்கின்றது. அதேவேளை, இலங்கை சுங்கத்தின் ஒழுங்குவிதிகள் மற்றும் முறைப்பாடுகள் உள்ளடங்களாக அதன் நிருவாகத்தின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாகவும் இருக்கின்றது. மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கான கொள்கை உருவாக்கல் மற்றும் சலுகைத் திட்டங்களைச் செயற்படுத்தல் அத்துடன் பல்வேறு தீர்வைச் சலுகைத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் விற்பனை என்பன இப்பிரிவின் கீழ்வருகின்றன. இப்பிரிவின் முக்கியமான செயற்பாடுகளை பின்வருமாறு குறிப்பிட முடியும்;

#### வர்த்தகக் கொள்கை

i. மோட்டார் வாகன இறக்குமதிக் கொள்கையை முகாமை செய்தல்.
ii. வர்த்தக/வியாபாரப் பேரவைகளை ஒழுங்குசெய்தல்.
iii. பங்குதாரர்களுக்கிடையே வர்த்தகக் கொள்கை தொடர்பான கலந்துரையாடல்களை நடாத்துதல்.
iv. வர்த்தகம் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு.
v. பங்குதாரர்களினால் முன்வைக்கப்படும் வர்த்தகக் கொள்கை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல்.
vi. அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் வர்த்த வரிக் கொள்கைப் பத்திரத்திரங்களை தயாரித்தல்.
vii. வர்த்தக வரிக் கொள்கைகள் தொடர்பான நீதிமன்ற வழக்குகளுக்கான பதில்களைத் தொகுத்தல்.
viii. வரிக் கொள்கைகள் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் /அவதானிப்புகள் / கருத்துரைகள் என்பவற்றைத் தயாரித்தல்.

ix. வர்த்தகம் /வரிக் கொள்கைகள் தொடர்பான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல்.
x. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளின் பிரகடனத்திற்கு வசதியளித்தல்.
xi. அந்நிய செலாவணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளின் / விடயங்களின் பிரகடனத்திற்கு வசதியளித்தல்.
xii. விலைமதிப்பீடு உள்ளடங்களாக சுங்க வழக்குகள் மீதான மேன்முறையீடுகளை மீளாய்வுசெய்தல்.
xiii. சுங்க நிர்வாகம் மீதான கணக்காய்வு அறிக்கை மீதான மீளாய்வு.
xiv. TIEP திட்டத்தின் கொள்கை ஒருங்கிணைப்பு.
xv. பிணைய களஞ்சிய வசதிகளின் கொள்கை ஒருங்கிணைப்பு.

**தீர்வைக் கொள்கை**

i. 19 (அ) வரி விலக்களிப்பைக் ஒருங்கிணைத்தல்.
ii. அரசிறைப் பாதுகாப்புக் கட்டளையை (RPO) வெளியிடுதல்.
iii. தீர்வை முரண்பாடுகள் தொடர்பான குறைப்பாடுகளைத் தீர்த்தல்.
iv. இ.மு குறியீட்டு (HS Code) தேசிய உப பிரிவுகளை முகாமை செய்தல்.
v. இ.மு. குறியீடுகளுக்கு (HS Code) இணங்குதலும் இடம்மாற்றி வைத்தலும்.
vi. தீர்வைக் கொள்கை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் மாற்றீடுகளை பகுப்பாய்வுசெய்தல்.
vii. விசேட நுகர்வுப் பொருள் அறவீட்டுச் சட்டத்தினைச் செயற்படுத்தல்.
viii. தீர்வைக் கொள்கை மீளாய்வு மற்றும் இற்றைப்படுத்தல்.
ix. தீர்வைக் கொள்கை தொடர்பான பாராளுமன்ற அலுவல்கள்.
x. தீர்வை தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு.
xi. பங்குதாரர்களினால் முன்வைக்கப்படும் வர்த்தகக் கொள்கை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல்.
xii. அமைச்சரவைக்கான தீர்வைக் கொள்கைப் பத்திரங்களைத் தயாரித்தல்.
xiii. வர்த்தகக் கொள்கைகள் தொடர்பான நீதிமன்ற வழக்குகளுக்கான பதில்களைத் தொகுத்தல்.

**சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள்**

i. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் அரசிறைக் கொள்கை அமுலாக்கல்களை பகுப்பாய்வு செய்தல்.
ii. இலங்கையின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளுக்கு இணங்க வியாபாரக் கொள்கையை மீளாய்வு செய்தலும் இற்றைப்படுத்துதலும்.
iii. பின்வரும் உடன்படிக்கைகளின் தீர்வை வரிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்:

- இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)
- பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)
- தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)
- ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)
- இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SLSFTA)
- வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு உடன்படிக்கை (BIMSTEC FTA)
- உத்தேச சீனா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (CSFTA)

- பொருளாதார மற்றும் தொழில்நுட்ப கூட்டிணைப்பு உடன்படிக்கை (ETCA).

**விஷேட கருத்திட்டங்கள்**

- சலுகைத் திட்டத்தின் கீழ் அரசாங்க அலுவலர்களுக்கான மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்த் திட்டம்.

- பொது நிர்வாக சுற்றுநிருப இல. 22/99 இன் கீழ் வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்கள்.
- வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருப இல 210 இன் கீழ் இராஜதந்திர அலுவலர்களுக்கான சலுகை மோட்டார் வாகன இறக்குமதித் திட்டம்.

- பல்வேறு தீர்வைச் சலுகைத் திட்டங்களின் கீழ் இறக்குமதிசெய்யப்பட்ட வாகனங்களை அகற்றுதல்

- சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்வை விலக்களிப்புகள்.

- ஏற்றுமதிச் செயன்முறைத் திட்டத்திற்ான (TIEP) இறக்குமதி.

- ஏனைய அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அவதானிப்புகளைத் தயாரித்தலும் இத்திணைக்களத்தினால் அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தலும்.

- சார்க் அபிவிருத்தி நிதியம்.

**நிருவாக மற்றும் நிதிப் பிரிவு**

நிருவாக மற்றும் நிதிப் பிரிவானது மனித வளம், சொத்துக்கள் மற்றும் நிதி வளங்களுக்குப் பொறுப்பாக இருக்கின்றது. மனித வள முகாமைத்துவம் இடவமைவு, கொள்ளளவு அபிவிருத்தி மற்றும் திணைக்களத்திற்குள்ளே அலுவலர்களின் நலன்புரி என்பனவற்றை உள்ளடக்கியுள்ளதுடன் பௌதிக மற்றும் நிதி வளங்கள் முகாமைத்துவமானது கையகப்படுத்தல், பௌதிக மற்றும் நிதி வளங்கள் தொடர்பாகன பதிவுகளை மேற்கொள்ளல் மற்றும் பதிவேடுகளை பராமரித்தல் ஆகிய நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது.

## 1.7 நிறுவனக் கட்டமைப்பு




உ.ப. : உதவிப் பணிப்பாளர்
நி.அ : நிர்வாக அலுவலர்
த.தொ.தொ.அ : தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் அலுவலர்
அபி.அலு : அபிவிருத்தி அலுவலர்
பி.அ.மு.உ :பிரதான அரச முகாமைத்துவ உதவியாளர்
அ.மு.உ : அரச முகாமைத்துவ உதவியாளர்
அ.ஊ.சே : அலுவலக ஊழியர் சேவை

# 02. திணைக்களத்தின் செயலாற்றுகை

## 2.1 பிரதான அடைவுகள்

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 69 ஆம் பிரிவின் கீழ் பொது சுங்க பிணைக் குதத்தை அமைப்பதற்கு கொள்கை கட்டமைப்பு ஒன்று 2016 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் தனியார் சுங்க பிணைக் குதங்களுக்காக அக்கறையுடையோருடன் ஆலோசனை மேற்கொண்டு புதிய கொள்கை கட்டமைப்பு ஒன்றை உருவாக்குதற்கு இத் திணைக்களத்திற்கு முடிந்தது. இதன் மூலம் தனியார் சுங்க முறிகள் தொடர்பாக காணப்பட்ட கொள்கை இடைவெளி பூர்த்தி செய்யப்பட்டது.

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19(அ)(i) இன் படி, எந்தவொரு பொருளையும் அல்லது பொருட்களையும் இறக்குமதி செய்வதற்கான சுங்க வரிகளை தள்ளுபடி செய்ய நிதி அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது. பிரிவு 19(அ)(i) இன் கீழ் வழங்கப்பட்ட அனைத்து கடமை தள்ளுபடிகள் பற்றிய விவரங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும் மற்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் கூடிய விரைவில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

2011 முதல் 2017 வரை சுங்கத் துறையிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்ட கடமை விவரங்களைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதால், வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தால் வர்த்தமானி அறிவிப்புகளை வெளியிட முடியவில்லை.

எவ்வாறாயினும், கடந்த ஆண்டில் தொடர்ந்த முயற்சியில், 2011 முதல் 2018 வரையிலான கடமை தள்ளுபடிகள் தொடர்பான அனைத்து நிலுவை வர்த்தமானி அறிவிப்புகளையும் திணைக்களம் வெளியிட்டு தாக்கல் செய்ய முடிந்தது. அதோடு, கடமை தள்ளுபடி செய்யப்பட்டதில் சுங்கத் துறையிடமிருந்து சரியான நேரத்தில் தகவல்களை சேகரிக்க ஒரு புதிய செயல்முறையை திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

## 2.2 வர்த்தகக் கொள்கை

இலங்கையின் வரத்தகக் கொள்கைகள் உள்நாட்டு உற்பத்தி இயலளவை மற்றும் வர்த்தக செயலாற்றுகை ஆகியவற்றை மேம்படுத்தல், உலக மற்றும் பிராந்திய சந்தைகளில் நாட்டின் ஒருங்கிணைப்பு, மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் மற்றும் நாட்டின் நீண்டகால பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரித்தல் என்பவற்றை இலக்காகக் கொண்டுள்ளன.

வெளிநாட்டு வர்த்தகமானது பொருளாதாரத்துடன் ஒருங்கிணைந்த ஒரு பகுதியான அதேசமயம் உள்நாட்டு துறையின் தேவைப்பாடுகளையும் கருத்திற்கொண்டு வெளிவாரியான வர்த்தகம் பற்றிய சாதகமான நோக்குடன் இலங்கையை உலக சந்தையுடன் ஒருங்கிணைப்பதற்கான நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது.

இன்று, தீர்வை வரிகளும் ஏனைய எல்லைவரிகளும் சந்தையில் உள்ள பொருட்களின் வர்த்தகத்திற்கான களத்தை உருவாக்கும் முக்கிய கருவியாகும், அதே நேரத்தில் இறக்குமதிகள் அல்லது ஏற்றுமதிகளில் உரிமம் மற்றும் ஒதுக்கீடு போன்ற தடைகள் அல்லது இடையூறுகள் காணப்படவில்லை. வெளிநாட்டு வர்த்தகத்தில் உள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் ஒரு வெளிப்படையான மற்றும் கணிக்கக்கூடிய கட்டமைப்பை வழங்கும் நோக்கில் அரசாங்கத்தின் கட்டண கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.இலங்கையின் தற்போதைய தீர்வை கட்டமைப்பு பூச்சியத்திலிருந்து 30% வீதம் மூன்று முனை கட்டண நிர்மாணத்தின் கீழ் 0%, 15% மற்றும் 30% வீதமாகவும் உள்ளது. இது உண்மையில் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் அடிப்படை மூலப்பொருட்களுக்கு 0% ஆகவும், இடைநிலை தயாரிப்புகளுக்கு 15% மற்றும் பிற முடிக்கப்பட்ட தயாரிப்புகளுக்கு 30% ஆகவும் ஏற்புடையதாக உள்ளது.

## 2.3 வர்த்தக உடன்படிக்கைகள்

வர்த்தக மற்றும் முதலீட்டிற்கான வசதிகளை அதிகப்படுத்துதல், சுங்கவரி, இறக்குமதி அளவுகோல்கள், ஏற்றுமதி கட்டுப்பாடுகள் மற்றும் பிற வர்த்தக தடைகளை குறைத்தல் / நீக்குதல் போன்றவற்றின் ஊடாக வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதில் இருதரப்பு மற்றும் பன்முக வர்த்தக உடன்படிக்கைகள் பலனளிக்கின்றன. வர்த்தக ஒப்பந்தங்கள் பெரும்பாலும் முதலீட்டு உத்தரவாதங்களை உள்ளடக்கியுள்ள அதேசமயம் வர்த்தக பற்றாக்குறைகளை குறைக்க உதவும். சர்வதேச வர்த்தகத்திலிருந்து பொருளாதார ஆதாயங்கள் பல நாடுகள் அல்லது பிராந்தியங்கள் வர்த்தக தடைகளில் பரஸ்பர குறைப்புக்கு உடன்படுவதால், வலுவூட்டப்பட்டு மேம்படுத்தப்படும். இலங்கை சில எண்ணிக்கையிலான வர்த்தக உடன்படிக்கைகளில் கையொப்பமிட்டுள்ளது;

➢ **உறுதிசெய்யப்பட்ட வர்த்தக உடன்படிக்கைகள்**

- இந்தியா- இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)
- பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)
- தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)
- ஆசிய- பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)
- இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SLSFTA)

➢ **பேச்சுவார்த்தை மட்டத்திலுள்ள வர்த்தக உடன்படிக்கைகள்**

- வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு உடன்படிக்கை (BIMSTEC)
- பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை (ETCA)
- சீனா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (CSLFTA)
- இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

வர்த்தக தாராளமயமாக்கலின் ஆரம்ப கட்டங்களில் இலங்கையானது பெரும்பாலும் பண்ட வர்த்தகத்தில் தாராளமயமாக்கலை மையப்படுத்திய ஒருசில இருதரப்பு மற்றும் பன்னாட்டு வர்த்தக உடன்படிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) மற்றும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA) போன்ற சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளுக்கான எடுத்துக்காட்டுகளாக உள்ளன. தென் ஆசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (SAFTA) மற்றும் ஆசியா பசிபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA) ஆகியவை பொருட்கள் வர்த்தகத்தில் தாராளமயமாக்கலுக்கான பன்முகத் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் ஆகும். பின்வந்த கட்டங்களில் இது சேவைகளின் வர்த்தகம் முதலீடு மற்றும் சுங்கத்தின் ஒத்துழைப்பு போன்ற பல்வேறு துறைகளில் விருத்தி செய்யப்பட்டது.

இலங்கைக்கான வர்த்தக உடன்படிக்கைகளின் பிரதான நோக்கம், உயர்வான தலா வருமானத்தை அடைதல், சுற்றுலாத் துறைக்கான சுவர்க்கபுரியாக இலங்கையை மாற்றுதல், போட்டிக்குரிய வர்த்தகச் சூழலொன்றில் சாத்தியமான கைத்தொழில்களைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்கின்ற அதேவேளையில் வர்த்தகத்திற்கும் முதலீட்டுக்குமான கேந்திர நிலையமாக இலங்கையை ஊக்குவித்தல் என்பனவாகும். முழுமையான பொருளாதார ஒத்துழைப்புக்கான வேலைச் சட்டகங்களை வகுப்பதினூடாக சேவைகளின் வர்த்தகத்திற்காக பொருத்தமான முதலீடுகளைக் கவர்வதற்கும் சாதகமான சூழலை உருவாக்குவதற்கும் உயர்ந்த அளவிலான முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.1 வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான செயலாற்றுகை

வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் தீர்வை வரித் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வர்த்தகத் திணைக்களத்துடன் கலந்துரையாடி வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தினால் பொருத்தமான பின்பற்றல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், பின்வரும் செயலாற்றுகையானது, தீர்வை வரி தாராளமயமாக்கல் திட்டம் உள்ளடங்கலாக வர்த்தக உடன்படிக்கைகளின் நடைமுறைப்படுத்தல் சம்பந்தமான மீளாய்வின் கீழான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

#### 2.3.1.1 உறுதி செய்யப்பட்ட வர்த்தக உடன்படிக்கைகள்

##### 2.3.1.1.1 இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)

1998 டிசம்பர் 28 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டதும் 2000 மார்ச் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டதுமான இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, இவ்விரு நாடுகளுக்கிடையேயான இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தத்தினால் முதலீடு செய்யப்பட்டுள்ள இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டின் அதிகரிப்பின் மூலம் இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் பொருளாதார இணைப்புகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ் உடன்படிக்கை மூலம் இருநாடுகளும் இலவச வரி அடிப்படையில் அல்லது வரிச் சலுகை அடிப்படையில் தத்தமது ஏற்றுமதியினை மேற்கொள்வதற்கான சந்தை வசதியினையும் பொருட்களின் கொண்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் செயலாற்றுகை பின்வருமாறு;

2019 ஆம் ஆண்டில் பின்வரும் எச்.எஸ் குறியீடுகள் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் சீஐஎப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட ஐந்து முதன்மையான பண்டங்களைக் குறிக்கின்றன.

**அட்டவணை 2.1 - 2019 ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான இறக்குமதிகள்**

| இ. மு. குறியீடு | இ. மு. விபரம் | எண்ணிக்கை | சீஐஎப் பெறுமதி |
|---|---|---|---|
| 72279000 | பிற கலப்பு உருக்கினாலான நீரில்லாத சுற்றுக்களில் சுற்றப்பட்ட சூடாக்கி உருட்டிய சட்டங்களும் தண்டுகளும். | 40,429,686 | 4,095,911,051 |
| 84181090 | மின்னியக்கம் உடையனவும் மின்னியக்கம் அல்லாதனவுமான குளிரேற்றிகள், வலுவாக உறையவைக்கும், பிற குளிரேற்றும் அல்லது உறையவைக்கும் சாதனங்கள்: தலைப்பு 84.15 இன் குளிரூட்டிகள் தவிர்ந்த வெப்ப பம்பிகள். | 74,602 | 2,643,787,542 |
| 84151022 | வெப்பநிலையையும் வாயுவின் ஈரப்பதனையும் மாற்றுவதற்கான சுயமாக மோட்டாரினால் இயக்கும் விசிறியையும் மூலகங்களையும் உட்கொண்டிருக்கும் காற்றுச் சீராக்கும் பொறித் தொகுதிகள் - கொள்ளளவானது 9000 BTU க்கு மேற்பட்டவை மற்றும் 12000 BTU க்கு மேற்படாதவை. | 44,646 | 2,020,535,634 |
| 70052900 | ஈர்க்கும் இயல்புடைய அல்லது பிம்பம் பிரதிபலிக்கும் படிவங்களைக் கொண்ட அல்லது அவற்றைக் கொண்டிராத தகடுகளாக வழுவழுப்பாக்கிய | 2,977,873 | 1,410,047,249 |

| | | | |
|---|---|---|---|
| | கண்ணாடியும் மேற்பரப்பு தேய்க்கப்பெற்ற கண்ணாடியும் அல்லது மினுக்கேற்றிய கண்ணாடியும். | | |
| 23040000 | எண்ணெய் புண்ணாக்கும், வேறு திண்ம மீதிகளும் அரைக்கப்பட்டவை அல்லது அரைக்கப்படாதவை அல்லது சிறு உருண்டைகளாக, சோயா அவரை எண்ணெய் பிரித்தெடுத்தலின் போது கிடைக்கப் பெறுபவை. | 14,388,482 | 1,383,190,490 |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2019*

பின்வரும் எச்.எஸ் குறியீடுகள் 2019 ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் எப்ஓபீ பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட ஐந்து முதன்மையான பண்டங்களைக் குறிக்கின்றன.

**அட்டவணை 2.2 - 2019 ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகள்**

| இ. மு. குறியீடு | இ. மு. விபரம் | எண்ணிக்கை | எப்ஓபி பெறுமதி |
|---|---|---|---|
| 23099030 | கோழிகளின் தீனி | 14,500,838 | 11,014,115,551 |
| 08028090 | பிற விதைகள், புதிய அல்லது உலர்த்திய, கோது நீக்கிய அல்லது நீக்காத, தோல் நீக்கப்பட்ட அல்லது நீக்கப்படாதவை. | 5,715,030 | 3,646,703,960 |
| 85443000 | எரியூட்டும் கம்பி இணைகளும் ஏனைய கம்பி இணைகளும் வாகனங்கள், வானூர்தி அல்லது கப்பல்களுக்காக உபயோகப்படுத்தக் கூடியவை.<br><br>1000V க்கு மேற்படாத வோல்ற்களுக்கான | 1,913,592 | 3,408,003,742 |
| 47079000 | பிற, தெரிவு செய்யாத கழிவுகளையும் உள்ளடக்கிய மீள்பெறப்பட்ட(கழிவும் துண்டுகளும்) காகிதம் அல்லது காகித அட்டை. | 77,688,806 | 2,652,399,247 |
| 15162000 | தாவரக் கொழுப்புகளும் எண்ணெய்களும் அவற்றின் பகுதிகளும், ஐதரசனேற்றப்பட்டவை முதலிய, மேலும் தயாரிக்கப்படாதவை. | 15,812,038 | 2,207,458,844 |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2019*

பின்வரும் அட்டவணையில் 2019 ஆம் ஆண்டில்பதிவு செய்யப்பட்ட இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான மொத்த ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளின் பெறுமதிகள் 2018 ஆம் ஆண்டின் ஒப்பீட்டுடன் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.3 - 2018/2019 ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான மொத்த இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் பெறுமதிகள்**

| 2018 | | 2019 | | 2018 முதல் 2019 வரையான இறக்கமதிகளிலுள்ள வேறுபாடு (சீஜஎப்) (%) | 2018 முதல் 2019 வரையான ஏற்றுமதிகளிலுள்ள வேறுபாடு (எப்ஓபீ) (%) |
|---|---|---|---|---|---|
| இறக்குமதிகளின் பெறுமதி (சீஜஎப்) (மில்லியன் ரூபா) | ஏற்றுமதிகளின் பெறுமதி (எப்ஓபீ) (மில்லியன் ரூபா) | இறக்குமதிகளின் பெறுமதி (சீஜஎப்) (மில்லியன் ரூபா) | ஏற்றுமதிகளின் பெறுமதி (எப்ஓபீ) (மில்லியன் ரூபா) | | |
| **41,273** | **81,929** | **38,705** | **86,916** | **6.22%** | **6.09%** |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2019*

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் இறக்குமதிகள் 2,568 மில்லியன் ரூபாவினால் வீழ்ச்சியடைந்து ஏற்றுமதிகள் 4,987 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளமையை அட்டவணையில் அவதானிக்கலாம். அத்துடன், வர்த்தக மிகையானது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் 7,555 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது.

இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தகத்தை மேலும் இலகுபடுத்துவதற்காகபொருளாதார மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை கூட்டங்களின் போது மீளாய்வு செய்யப்படுகிறது. இதன் படி, 2019 ஆம் ஆண்டில் பேச்சுவார்த்தை செயன்முறையின் வேகம் குறைந்தாலும் அக்கறையுள்ளோரின் பங்களிப்புடன் வர்த்தக திணைக்களத்தினால் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

உண்மையில், துவிச்சக்கர வண்டிகளுக்கான எச்.எஸ் குறியீடு தொடர்பான சில சிக்கல்கள் உரிய சாராருடன் ஆலோசனையுடன் கையாளப்பட்டு குறிப்பிட்ட காலத்திற்குள் சீர்செய்யப்பட்டது.

**2.3.1.1.2 பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)**

2005 யூன் 12 ஆந் திகதி நடைமுறைப்படுத்தப்பட்ட பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தில் கணிசமானளவு முன்னேற்றத்திற்கான ஒரு கருவியாகும். மார்ச் 2009 இல் பாகிஸ்தான் தனது இறுதிக்கட்ட ஒப்பந்தத்தை அமுல்படுத்தியுள்ளதுடன், இப்போது இலங்கையில் 4500 க்கும் மேற்பட்ட தயாரிப்புகளுக்கு தடையற்ற சந்தை அணுகலை கொண்டுள்ளது. 2010 நவம்பரில் இலங்கையானது தனது கடமைகளை அமுல்படுத்தியது.

2019 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் செயலாற்றுகை பின்வருமாறு;

2019 ஆம் ஆண்டில், பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் சீஜஎப் பெறுமதி அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட ஐந்து முதன்மை பண்டங்களை பின்வரும் எச்எஸ் குறியீடுகள் குறிக்கின்றன.

**அட்டவணை 2.4 - 2019 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான இறக்குமதிகள்**

| இ. மு. குறியீடு | இ. மு. விபரம் | எண்ணிக்கை | சீஐஎப் பெறுமதி |
|---|---|---|---|
| 10019910 | கோதுமை தானியம் | 126,953,521 | 5,628,381,961 |
| 73063000 | பிற, ஒட்டப்பட்ட, வட்டவடிவான வெட்டு முகமுடைய இரும்பு அல்லது கலப்பில்லாத இரும்பின் | 4,749,743 | 716,002,426 |
| 70052900 | ஈர்க்கும் இயல்புடைய அல்லது பிம்பம் பிரதிபலிக்கும் படிவங்களைக் கொண்ட அல்லது அவற்றைக் கொண்டிராத தகடுகளாக வழுவழுப்பாக்கிய மேற்பரப்பு தேய்க்கப்பெற்ற கண்ணாடியும் அல்லது மினுக்கேற்றிய கண்ணாடியும் | 908,205 | 470,235,222 |
| 08052110 | புத்தம்புதியவை - சிற்றஸ் பழங்கள், புதிய அல்லது உலர்ந்தவை | 6,465,541 | 299,188,174 |
| 10063040 | பாஸ்மதி அரிசி மற்றும் நீள் குறுணிஅரிசி (லோங் கிறயின் றைஸ்) | 1,950,000 | 237,602,468 |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2019*

2019 ஆம் ஆண்டில், பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் எப்ஓபீ பெறுமதி அடிப்படையில் ஏற்றுமதி செய்யப்பட்ட ஐந்து முதன்மை பண்டங்களை பின்வரும் எச்எஸ் குறியீடுகள் குறிக்கின்றன.

**அட்டவணை 2.5 - 2019 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகள்**

| இ. மு. குறியீடு | இ. மு. விபரம் | எண்ணிக்கை | எப்ஓபி பெறுமதி |
|---|---|---|---|
| 14049020 | வெற்றிலைகள் | 4,217,903 | 3,053,971,586 |
| 12030000 | கொப்பரைத் தேங்காய் | 3,939,350 | 915,414,139 |
| 08011200 | உள்ளக கோதுகளில் (என்டோகாப்) புதிய அல்லது உலர்த்திய கோது நீக்கிய அல்லது நீக்காத தோல் நீக்கப்பட்ட அல்லது நீக்கப்படாத தேய்காய்கள், பிறேசில் விதைகளும் மரமுந்திரி விதைகளும் | 11,267,459 | 834,771,990 |
| 44111490 | பிற-தடிப்பமானது 9 மி மீற்றருக்கு மேற்பட்டவை நிறசின்கள் அல்லது பிற சோனப் பொருட்களால் பினைக்கப்பட்ட அல்லது பிணைக்கப்படாத மரத்தாலான அல்லது பிற லிக்னின் பொருட்களாலான நார் அட்டைகள் | 18,448,759 | 824,329,395 |
| 58079000 | பிற பின்னல் வேலை செய்யாது நீளமான துண்டுகளாக அல்லது துண்டாக ஆல்லது உருவமாக வெட்டப்பட்டவையாக அல்லது அளவாக வெட்டப்பட்ட தலைச்சின்னம், முத்திரை பொறிப்பு அது போன்றவையும் | 69,601 | 345,507,704 |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2019*

பின்வரும் அட்டவணையில் 2019 ஆம் ஆண்டில்பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்த ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளின் பெறுமதியும் 2018 ஆம் ஆண்டின் புள்ளிவிபரங்களுடனான ஒப்பீடும் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.6 2018/2019 ஆண்டில் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளினதும் இறக்குமதிகளினதும் பெறுமதி**

| 2018 | | 2019 | | 2018 முதல் 2019 வரையான இறக்கமதிகளிலுள்ள வேறுபாடு (சீஜஎப்) (%) | 2018 முதல் 2019 வரையான ஏற்றுமதிகளிலுள்ள வேறுபாடு (எப்ஓபீ) (%) |
|---|---|---|---|---|---|
| இறக்குமதிகளின் பெறுமதி (சீஜஎப்) (மில்லியன் ரூபா) | ஏற்றுமதிகளின் பெறுமதி (எப்ஓபீ) (மில்லியன் ரூபா) | இறக்குமதிகளின் பெறுமதி (சீஜஎப்) (மில்லியன் ரூபா) | ஏற்றுமதிகளின் பெறுமதி (எப்ஓபீ) (மில்லியன் ரூபா) | | |
| **12,062** | **8,772** | **7,822** | **10,882** | **35.15%** | **24.05%** |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2019*

இவ் அட்டவணையின் படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் ஏற்றுமதிகள் 2,110 மில்லியன் ரூபாவால் அதிகரித்து இறக்குமதிகள் 4,240 மில்லியன் ரூபாவால் வீழ்ச்சியடைந்துள்ளன. அத்துடன், 2018 ஆம் ஆண்டில் வர்த்தகப் பற்றாக்குறையும் 2019 ஆம் ஆண்டில் 3,060 மில்லியன் ரூபா வர்த்தக மிகையும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**2.3.1.1.3 தெற்காசியாவுக்கான சுகந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)**

தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஏற்பாடு (SAPTA) 1993 ஏப்ரலில் கைச்சாத்திடப்பட்டதுடன், 1995 டிசம்பரில் செயற்பாட்டிற்கு வந்தது. தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஏற்பாடானது முன்னுரிமை வர்த்தகத்தை மேம்படுத்துவதினூடாக, பல்துறை பொருளாதார ஒருங்கிணைப்பு திட்டத்தை மேலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

எவ்வாறாயினும், உறுப்பு நாடுகளின் முன்னுரிமை வர்த்தக ஏற்பாட்டிற்கு அப்பால் முன்னேற்றம் மற்றும் பிராந்தியத்தில் வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றின் உயர் மட்டத்தை நோக்கிச் செல்ல வேண்டியதன் அவசியத்தை அங்கத்துவ நாடுகள் அங்கீகரித்துள்ளன. இதன் விளைவாக, சார்க் அமைச்சர்களின் பேரவை 2004 சனவரியில் இஸ்லாமாபாத்தில் தெற்காசிய சுதந்திர வர்த்தக பிரதேச உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். தெற்காசிய சுதந்திர வர்த்தக பிரதேச உடன்படிக்கை (SAFTA) 2006 சனவரி 1 ஆந் திகதி அமுலுக்கு வந்தது.

தெற்காசிய சுதந்திர வர்த்தக பிரதேச உடன்படிக்கையின் தீர்வை தாராளமயமாக்கல் திட்டத்தின் (Tariff Liberalization Programme) முதலாவது கட்டம் 2015 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது. கட்டம் II இன் கீழ், தீர்வை தாராளமயமாக்கலின் கீழ் உணர்திறன் பட்டியலில் சில பொருட்களை விடுவிப்பதற்கு இலங்கை நடவடிக்கை எடுக்கவுள்ளது.. இவ்விதத்தில், தாராளமயமாக்கல் அல்லாத நாடுகளில் (NLDCs) கீழ் வரும் பொருட்களின் மீதமுள்ள பட்டியல் கண்டறியப்பட்டுள்ளது. கட்டம் III எதிர்காலத்தில் சார்க் உறுப்பினர் நாடுகளிடையே பரஸ்பர இணக்கப்பாட்டிற்கு ஏற்ப செயல்படுத்தப்படும். சார்க் - ஆசிய அபிவிருத்தி வங்கி பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு ஆய்வின் (கட்டம் II) நான்காவது விசேட கூட்டம் 2019 யூன் 24 – 25 ஆம் திகதிகளில் காத்மண்டுவில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சார்க் செயலகம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக சார்க் உறுப்பு நாடுகளின் பங்குபற்றலுடன் சேவைகளின் வர்த்தகம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் செயலாற்றுகை பின்வருமாறு;

2019 ஆம் ஆண்டில் சீஐஎப் பெறுமதி அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட ஐந்து முதன்மைப் பண்டங்களை பின்வரும் எச்.எஸ்.குறியீடுகள் குறிக்கின்றன.

**அட்டவணை 2.7 - 2019 ஆம் ஆண்டில் தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான இறக்குமதிகள்**

| இ. மு. குறியீடு | இ. மு. விபரம் | எண்ணிக்கை | சீஐஎப் பெறுமதி |
|---|---|---|---|
| 84181090 | பிற – மின்னியக்கம் உடையனவும் மின்னியக்கம் அல்லாதனவுமான குளிரேற்றிகள்இ வலுவாக உறையவைக்கும், பிற குளிரேற்’றும் அல்லது உறையவைக்கும் சாதனங்கள் : தலைப்பு 84.15 இன் குளிருட்டிகள் தவிர்ந்த வெப்ப பம்பிகள் | 26,996 | 1,034,211,758 |
| 03069500 | கூனி இறால் மற்றும் இறால்கள் | 860,083 | 176,957,940 |
| 64069091 | உள்ளக அடிப்பாகங்களுக்கு இணைக்கப்பட்ட மேல்பாகம் | 486,856 | 92,457,524 |
| 48030000 | மலசலகூட அல்லது முகத்தினை துப்பரவுசெய்யும் திசு வைப்பகம், துண்டு அல்லது துடைப்பான் வைப்பகம் மற்றும் வீட்டுப் பாவனை அல்லது மலசல கூட நோக்கங்களுக்காக பாவிக்கப்படும் ஒரு வகையான ஒத்த கடதாசி, செலுலோசு மென்பஞ்சுறை மற்றும் செலுலோசு நாரிலான பின்னல் பொருட்களும், நொறுக்கப்பட்ட, பொறிக்கப்பட்ட, துளைக்கப்பட்ட, மேற்பரப்பு நிறமூட்டப்பட்ட, அல்லது அச்சடிக்கப்பட்டவை அல்லது இவையனைத்தும் செய்யப்படாதவை, உருளைகளில் அல்லது விரிப்புகளில் | 309,842 | 63,318,009 |
| 87089110 | றேடியேற்றர்கள் | 20,699 | 30,295,335 |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2019*

2019 ஆம் ஆண்டில் எப்.ஓ.பீ பெறுமதி அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட ஐந்து முதன்மைப் பண்டங்களை பின்வரும் எச்.எஸ். குறியீடுகள் குறிக்கின்றன.

**அட்டவணை 2.8 - 2019 ஆம் ஆண்டில் தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகள்**

| இ. மு. குறியீடு | இ. மு. விபரம் | எண்ணிக்கை | எப்ஓபி பெறுமதி |
|---|---|---|---|
| 08011190 | பிற - புதிய அல்லது உலர்த்திய கோது நீக்கிய அல்லது நீக்காத தோல் நீக்கப்பட்ட அல்லது நீக்கப்படாத தேய்காய்கள், பிரேசில் விதைகளும் மரமுந்திரி விதைகளும் | 19,913,410 | 4,845,042,766 |
| 09041190 | *பிற - வைப்பர்* இனத்து மிளகு : உலர்த்திய அல்லது நசுக்கப்பட்ட அல்லது அரைக்கப்பட்ட *காப்சிக்கம்* இன அல்லது *பிமென்ரா* இனத்தவை. | 1,068,400 | 1,302,558,164 |
| 09041120 | ஒரு லீற்றருக்கு 450 கிராம்களுக்கு மேற்பட்ட அடர்த்தியினைக் கொண்ட முதிர்ச்சியடைந்த மிளகு பெரிகள் | 765,841 | 1,004,911,878 |
| 09041111 | கரியச் சேர்மானமுடைய மிளகு- *வைப்பர்* இனத்து மிளகு : உலர்த்திய அல்லது நசுக்கப்பட்ட அல்லது அரைக்கப்பட்ட *காப்சிக்கம்* இன அல்லது *பிமென்ரா* இனத்தவை. | 550,000 | 720,247,512 |
| 09041119 | பிற - *வைப்பர்* இனத்து மிளகு : உலர்த்திய அல்லது நசுக்கப்பட்ட அல்லது அரைக்கப்பட்ட *காப்சிக்கம்* இன அல்லது *பிமென்ரா* இனத்தவை. | 68,000 | 144,831,464 |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2019*

பின்வரும் அட்டவணையில் 2019 ஆம் ஆண்டில் தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்த ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளின் பெறுமதியும் 2018 ஆம் ஆண்டின் புள்ளிவிபரங்களுடனான ஒப்பீடும் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.9 - 2018/2019 ஆண்டில் தெற்காசியசுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளினதும் இறக்குமதிகளினதும் பெறுமதி**

| 2018 | | 2019 | | 2018 முதல் 2019 வரையான இறக்கமதிகளிலுள்ள வேறுபாடு (சீஐஎப்) (%) | 2018 முதல் 2019 வரையான ஏற்றுமதிகளிலுள்ள வேறுபாடு (எப்ஓபீ) (%) |
|---|---|---|---|---|---|
| இறக்குமதிகளின் பெறுமதி (சீஐஎப்) (மில்லியன் ரூபா) | ஏற்றுமதிகளின் பெறுமதி (எப்ஓபீ) (மில்லியன் ரூபா) | இறக்குமதிகளின் பெறுமதி (சீஐஎப்) (மில்லியன் ரூபா) | ஏற்றுமதிகளின் பெறுமதி (எப்ஓபீ) (மில்லியன் ரூபா) | | |
| **1,215** | **9,237** | **1,560** | **10,440** | **28.4%** | **13.02%** |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2018/2019*

2019 ஆம் ஆண்டில் இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் முறையே 345 மில்லியன் ரூபாவினாலும் 1,203 மில்லியன் ரூபாவினாலும் அதிகரித்துள்ளமையை அட்டவணையில் அவதானிக்கலாம். அத்துடன், 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் 858 மில்லியன் ரூபா வர்த்தக மிகை பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 2.3.1.1.4 ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)

1975 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையானது முன்னர் பாங்கொக் உடன்படிக்கை என அழைக்கப்பட்டதுடன், வங்காளதேசம், சீனா, இந்தியா, லாவோஸ் கொரியா குடியரசு மற்றும் இலங்கை ஆகிய 06 பங்கேற்பு நாடுகளை உள்ளடக்கியுள்ள ஆசியாவின் மிகப் பழமையான பல்துறை முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தங்களில் ஒன்றாக காணப்படுகின்றது.

ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை என்பது இலங்கைக்கு சாதகமான விளைவுகளை வழங்கக் கூடிய ஒரு பல்துறை ஒப்பந்தமாகும். இது குறிப்பாக சீனா மற்றும் கொரியா குடியரசுடனான வர்த்தகத்திற்கு வசதியளிக்கும் ஒரே ஒரு வர்த்தக உடன்படிக்கையாக காணப்படுவதனால் இலங்கைக்கு முக்கியமானதாக அமைகின்றது.

தற்போது, இலங்கை APTA வின் 4 ஆவது சுற்று நடைமுறைப்படுத்தலுக்குப் பின்னர் அனைத்து நாடுகளுக்குமான 644 தீர்வை வரிசைகளையும் (HS 2017 பதிப்பு) குறைவிருத்தி நாடுகளுக்காக 77 தீர்வை வரிசைகளையும் (HS 2017 பதிப்பு) தாராளமயப்படுத்தியுள்ளது. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் 5 ஆம் சுற்று பேச்சுவார்த்தைகளின் மாதிரிகளைத் தீர்மானிப்பதற்கு ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை செயற்குழுவின் 54, 55, மற்றும் 56 ஆம் கூட்டத் தொடர்கள் 2019 ஆம் ஆண்டில் நடைபெற்றது. 5 ஆம் சுற்று பேச்சுவார்த்தைக்கான இலங்கையின் பரப்பெல்லையும் முன்னுரிமைக்கான வரையறையும் (MOP) இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை.

2019 ஆம் ஆண்டில் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் செயலாற்றுகை பின்வருமாறு;

2019 ஆம் ஆண்டில் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் சீஐஎப் பெறுமதி அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட ஐந்து முதன்மைப் பண்டங்களை பின்வரும் எச்.எஸ். குறியீடுகள் குறிக்கின்றன.

**அட்டவணை 2.10 - 2019 ஆம் ஆண்டில் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழான இறக்குமதிகள்**

| இ. மு. குறியீடு | இ. மு. விபரம் | எண்ணிக்கை | சீஐஎப் பெறுமதி |
|---|---|---|---|
| 85287299 | பிற – தொலைக்காட்சிக்கான ஏற்புக்கருவிகள் வானொலி ஏற்புக்கள் அல்லது சத்தம் அல்லது வீடியோ பதிவு அல்லது மீள உண்டுபண்ணும் கருவிகள் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாதவை | 32,792 | 946,050,340 |
| 73089000 | முடிவற்ற அமைப்புக்கள்(தலைப்பு 94.06 இன் கீழ் வரும் முனைவுக்கட்டங்களினை தவிர்ந்த) அதன் பாகங்கள் உதாரணமாக பாலங்களும் பாலப்பகுதிகளும் பூட்டுவாயிச் கதவுகளும் கோபுரங்களும் பின்னப்பட்ட கப்பற்பாய் மரங்கள், கூரைகள்இகூரைச்சட்ட கோவைகள்இ கதவுச்சட்டங்கள் சன்னல் சட்டங்கள்இ இழுத்து மூடிகள், சிறு நுண்வரிசைத் தொகுதிகள், தூண்களும் சிறு தூண்களும் இரும்பினால் அல்லது உருக்கினால் ஆனவை தகடுகள் நீண்ட துண்டுகள்,பாளங்கள்இ கோணங்கள், வடிவங்கள், வெட்டுத்துண்டுகள், குளாய்களும் அவை போன்ற பொருட்களும் அமைப்புக்களுக்காக உபையோகிக்கப்படும் இரும்பினால் அல்லது உருக்கினால் ஆனவை | 6,945,366 | 827,929,683 |
| 39259000 | பிற- கட்டுநாரின் பிளாஸ்திக்காலான பொருட்கள், வேறிடத்தில் குறிக்கப்படாதான அல்லது சேர்க்கப்படாதன | 5,354,370 | 356,091,049 |
| 85362000 | தன்னியக்க சுற்று முறிப்புக்கள் | 95,000 | 270,056,260 |

| | | | |
|---|---|---|---|
| 85287291 | 32 அங்குலங்களுக்கு மேற்படாத திரையைக் கொண்டவை – பிற, எல்சீடீ திரைகள் மற்றும் புரொஜெக்ட்டர்களுடன், தொலைக்காட்சிக்கான ஏற்புக் கருவிகளுடன் கூட்டிணைக்கப் படாதவை; தொலைக்காட்சிக்கான ஏற்புக் கருவிகள் வானொலி ஒலிபரப்பு ஏற்புக்கள் அல்லது சத்தம் அல்லது வீடியோ பதிவு அல்லது மீள உண்டுபண்ணும் கருவிகள் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாதவை | 13,028 | 189,025,224 |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2019*

2019 ஆம் ஆண்டில் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் எப்ஓபீ பெறுமதி அடிப்படையில் ஏற்றுமதி செய்யப்பட்ட ஐந்து முதன்மைப் பண்டங்களை பின்வரும் எச்.எஸ்.குறியீடுகள் குறிக்கின்றன.

**அட்டவணை 2.11 - 2019 ஆம் ஆண்டில் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகள்**

| இ. மு. குறியீடு | இ. மு. விபரம் | எண்ணிக்கை | எப்ஓபி பெறுமதி |
|---|---|---|---|
| 09024092 | முழுமையாக இலங்கை உற்பத்தியென இலங்கை தேயிலைச் சபையினால் சான்றுப்படுத்தப்பட்டவை, பிற | 8,680,506 | 5,793,798,966 |
| 61099000 | ரீசேட்டுக்கள், கையில்லாத உட் சட்டைகளும் பிற மார்புச் சட்டைகளும் பின்னிய அல்லது வலைப்பின்னல் செய்த | 2,415,344 | 2,158,244,986 |
| 38021022 | தூண்டப்பட்ட காபன் - தேங்காய் சிரட்டைகளது தூளாக்கப்பட்டவைகள் பிற | 2,207,671 | 1,275,246,334 |
| 61046300 | தொகுப்பு நாரின் -பெண்கள் அல்லது சிறுமிகளின் சூட்டுக்கள் என்செம்பிள்கள், யக்கட்டுக்கள் பிளேசர்கள்,நீள காச்சட்டைகள், பிப்பும் பிறேஷ் ஒவறோல்களும் பிறச்சர்களும் குட்டையான காச்சட்டைகளும்( நீச்சலுடை தவிர்ந்த) பின்னப்பட்ட அல்லது வலைப்பின்னல் செய்யப்பட்டவை. | 701,198 | 1,221,975,001 |
| 53050023 | புற – திரிக்கப்படாதவை –தேங்காய் மட்டை(மணிலா ஹெம்ப் அல்லுத முகான் துணிவகைகள்) நார் நூற்றியும் மற்றும் மரக்கறிவகைகளும் துணிகளுக்கான நார்வகைகளும் வேறு அடங்களில் குறிப்பிடப்பாததும் எள்ளடக்கப்படாததும் பண்படாத சுத்திகரிக்கப்பட்ட ஆனால் சுழற்சியற்ற இழுவைப்பொறிகளும் பழுதடைந்த நார் வகைகளும்(முரட்டுப்படுத்திய சேமிப்புக்களும் நூல் கழிவுகளும் அடங்கலாக) | 25,659,300 | 1,016,795,093 |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2019*

பின்வரும் அட்டவணையில் 2019 ஆம் ஆண்டில்ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்த ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளின் பெறுமதியும் 2018 ஆம் ஆண்டின் புள்ளிவிபரங்களுடனான ஒப்பீடும் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.12 - 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் வர்த்தக செயற்பாடுகள்**

| 2018 | | 2019 | | 2018 முதல் 2019 வரையான இறக்கமதிகளிலுள்ள வேறுபாடு (சீஜஎப்) (%) | 2018 முதல் 2019 வரையான ஏற்றுமதிகளிலுள்ள வேறுபாடு (எப்ஓபீ) (%) |
|---|---|---|---|---|---|
| இறக்குமதிகளின் பெறுமதி (சீஐஎப்) (மில்லியன் ரூபா) | ஏற்றுமதிகளின் பெறுமதி (எப்ஓபீ) (மில்லியன் ரூபா) | இறக்குமதிகளின் பெறுமதி (சீஐஎப்) (மில்லியன் ரூபா) | ஏற்றுமதிகளின் பெறுமதி (எப்ஓபீ) (மில்லியன் ரூபா) | | |
| **3,076** | **108,018** | **3,763** | **31,045** | **22.33%** | **71.26%** |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2018/2019*

**2.3.1.1.5 இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை**

இலங்கை அரசாங்கம் மற்றும் சிங்கப்பூர் அரசாங்கம் ஆகியவற்றிற்கிடையில் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி இலங்கை – சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்ட அதேசமயம் 2018 மே 01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டது. இலங்கை – சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் 2 ஆம் அத்தியாயத்தில் பண்டங்களுக்கான தேசிய ரீதியான வகைப்பாடு மற்றும் சந்தை அணுகல் ‘‘இறக்குமதிகள் மீதான சுங்கத் தீர்வை குறைப்பு மற்றும்/அல்லது நீக்கல்’’ எனும் வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை – சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் 2.6 ஆம் பிரிவின் கீழ் தீர்வை தாராளமயமாக்கல் திட்டத்தை (இறக்குமதிகள் மீதான சுங்கத் தீர்வை குறைப்பு மற்றும்/அல்லது நீக்கல்) பின்வருமாறு நடைமுறைப்படுத்த அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது (‘‘ஆண்டு ஒன்று’’ இவ் உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த ஆண்டையும் ‘‘ஆண்டு இரண்டு’’, ‘‘ஆண்டு ஒன்று’’ க்குப் பின்வருகின்ற கலண்டர் ஆண்டையும் குறிக்கின்றன);

- ✓ ”0” என்ற உருப்படிகள் நிலை வகையில் வழங்கப்பட்டுள்ள உற்பத்தி நிலையிலுள்ள பொருட்கள் மீது சுங்கத் தீர்வையானது முற்று முழுதாக நீக்கப்படும் என்பதோடு, இந்த ஒப்பநதம் பயன்வலுப்பெறுகின்ற திகதியில் அத்தகைய பொருட்கள் மீதும் தீர்வைவிலக்களிக்கப்படும்.
- ✓ திறத்தவரின் அட்டவணையில் “6” என்ற உருப்படிகள் நிலை வகையில் வழங்கப்பட்டுள்ள உற்பத்தி நிலையிலுள்ள பொருட்கள் மீதான சுங்கத் தீர்வையானது, இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வருகின்ற ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கின்ற ஆறு (6) கட்டங்களில் நீக்கப்படும் என்பதோடு திசெம்பர் 31 ஆம் திகதி முதல் ஆறு (6) வருடங்களுக்குப் பயன்வலுப்பெறத்தக்க வகையில் அத்தகைய எந்தவொரு பொருள் மீதும் ஏதேனும் சுங்கத் தீர்வையும் விலக்களிக்கப்படும்.
